# இலங்கையில் "மித்திரன்" அதிபரவர்கள்.

## க்ஷேம நிதிக்குப் பேராதரவு.

### கேள்விகளும், அவற்றிற்குகந்த பதில்களும்.

### பொதுக் கூட்டம் கூட்ட முயற்சி.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

கொழும்பு:—மார்ச்சுமீ 19உ

நமது "மித்திரன்" க்ஷேம நிதிக்கு கொழும்புநகரைச் சார்ந்தபலஇடங்களிலும் மிகுந்தஆதரவேற்பட்டிருக்கிறது. போகும் ஒவ்வொரு இடத்திலும் மகாஜனங்கள் மிகுந்த பரிவுடன் ஆதரவு செய்தே வருகிறார்கள். 14—3—27ல் கனம் அதிபர் தம் சகாக்களுடன் மொரட்டுவா போயிருந்தனர். ஆங்கு நாடார்கள் அதிபரவர்களை உபசரித்து க்ஷேம நிதிக்கு ஒத்தாசை புரிந்ததுடன் சிலர் "மித்திரன்" சந்தாதாராயும் சேர்ந்தார்கள்.

பின்னர் பாணந்துறை சென்றார்கள். அவண் மிகுந்த குலாபிமானமுள்ள மேஸ்லர்ஸ் பி. அ. அரிணந்த பெருமாள் நாடாரவர்கள் மளிகையில் தங்கினார்கள். ஆண்டு அன்புடன் உபசரிக்கப்பட்டது. ஆங்கும் க்ஷேம நிதிக்கு மிகுந்த ஆதரவு கொடுக்கப்பட்டதுடன், சந்தாதாராகவும் சிலர் சேர்ந்தனர்.

பொதுவாக "மித்திரன்" க்ஷேம நிதிக்கு இலங்கையில் பேராதரவு ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். "மித்திரன்" தோற்றத்திற்கும், அதன் அபிவிருத்திக்கும் இலங்கை நாடார் பெருமக்கள் காரணராவார்களாதலின் தற்போது க்ஷேம நிதிக்கு ஆதரவு செய்வது மிகையாகாது. மற்றோர் காரணம் பொதுவாகச் சொல்லப்படுவதென்னவெனில், "மித்திரன்" என்றும் குன்றாது க்ஷேமமாய் நடைபெற வேண்டுமென்றும், அதற்கு ஆதரவு செய்வதே தருமமாகுமென்றும், தற்கால உலக மாறுதலில் நமது சமூகத்திற்கும், தேசத்திற்கும் எப்போதும் ஒத்துழைத்துவர "மித்திரன்" மிகவும் அவசியமென்றும், எட்டு வருஷகாலமாக இப்பத்திரிகையே சரியாக நடத்தப்பட்டு வருகிறதென்றும் பல்லோர் பலவித அபிப்பிராயங்கள்கொண்டு க்ஷேம நிதிக்குமிகுந்த பரிவு காட்டிவருகின்றார்கள்.

இஃது இந்தியாவிலுள்ளவர்களுக்கும் தூண்டுதலாகுமென்றே கருதுகின்றோம்.

இலங்கையில் சிறந்து விளங்கும் "டைம்ஸ் ஆப்சிலோன்" என்ற தினசரிப் பத்திரிகையின் தலைமை ஊழியர் ஸ்ரீமான் தானியேல் நாடாரவர்களும், ஸ்ரீமான்கள் ஞா. பா. வேதநாயகநாடாரவர்களும் எஸ். பி. எட்வர்ட் நாடாரவர்களும், கனம் அதிபரவர்களுக்கு பேராதரவுசெய்து வருகிறார்கள்.

கிறிஸ்தவ நாடார்களும் சமூக விஷயத்தில் என்றும் முன்னணியில் நிற்பவர்களே என்பதை நிதர்சனமாகக் காட்டுவது இச்சமயத்தில் அவசியம் என்பதை அன்னவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது. அன்னவர்கள் கூடிய சுருக்கில் ஓர் பொதுக் கூட்டம்கூட்டுவதற்குத்தகுந்த ஏற்பாடு செய்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் ஸ்ரீமான்கள் ஜெ. மு. ம. மிக்கேல் அந்தோணி நாடார், ஞா. ஜை. சிலுவை க்ஷத்திரியர் மற்றும் பல குலாபிமானிகளும் பக்கபலமாய் முன்னின்றுழைப்பது போற்றற்குரியது.

பிறகு, கொழும்புநகரைச் சேர்ந்த கொள்பிட்டி, கும்பெனித் தெரு, முகத்துவாரம், மசங்கா வீதி, பொரளை, புது ஆட்டுப்பட்டி, ஓல்பெண்டல் வீதி முதலிய முக்கிய பாகங்களுக்கும் விஜயஞ் செய்தார்கள். குறிப்பிட்ட எல்லா விடங்களிலும் கனம் அதிபரவர்கள் செல்லும்போது தகுந்த மரியாதையுடன் வரவேற்றுபசரித்து க்ஷேம நிதிக்கு ஆதரவு கொடுத்ததுடன் பற்பல சந்தேக வினாக்கள் கேட்கப்பட்டன. க்ஷத்திரிய மித்திரனுக்கு க்ஷேம நிதியாக சுமார் 3000 ரூபாய் இலங்கையில் வசூலித்துக் கொடுக்கப்பட்டது; அது ஜீவிய சந்தா, போஷகர், இரட்சகர், நன்கொடை என்ற முறையில் வசூல் செய்யப்பட்டது; தற்போது சுமார் 5, 6 மாதமாக "க்ஷத்திரிய மித்திர"னைக் காணோமே யென்று கேட்போர் சிலர்— "ஆனந்தவிஜயன்" என்ற பத்திரிகைக்கு இரு முறை இலங்கையில் நிதிப்பிரயாணம் எடுக்கப்பட்டது; ஜீவிய சந்தாக்களும் சேர்த்துக் கொடுக்கப்பட்டது; பத்திரிகை வரவில்லை; தற்போது ஸ்ரீமான் தாமஸ் பாலையாபிள்ளையிடம் க்ஷ. விஜயன் விஜயம் செய்வதேனோ? என்று வினவுவோர் ஒரு சாரார்— "பாண்டிய குல தீபம்", "நாடான்", "தட்சண தாரகை", "விஜய விகடன்" இன்னும் நம்மவர்களால் தோற்றப்பட்ட பத்திரிகைகள் எங்கே என்று விபரமறிய ஆசிப்போர் பலர். நாடார் மகாஜன சங்கத்திலும், "நாடார்குல மித்திர"னிலும் "ஹிந்து நாடார்கள்" "கிறிஸ்தவ நாடார்கள்" தென்னாட்டார், வடநாட்டார் என்ற பாகுபாடு இருப்பதாகச் சொல்கிறார்களே. இதன் மர்மம் என்ன? என்று சாற்றுவோர் ஓர் சாரார். கனம் அதிபரவர்கள் பிரஸ்தாப விஷயங்களை யெல்லாம் பொறுமையுடன் கேட்டு ஒவ்வொன்றுக்கும் சரியான பதிலும், ஏற்ற சமாதானமும் கூறினார்கள். நாடார் மகாஜன சங்கத்திலும், "நாடார்குல மித்திர"னிலும் வேறுபாடான கொள்கை எப்போதும் கிடையாது என்பதைத் தக்க ஆதாரத்துடன் கூறினார்கள். மகாஜன சங்கம் விஷயமாய்ப் பாளையங்கோட்டை நண்பர் மயிலேறி விசுவாசநாடார் "சுதேசமித்திர"னில் எழுதியதற்கு இலங்கையில்ஓராதரவுங் காணவில்லை. அப்படிப்பட்ட வேறுபாடான கொள்கை எப்போதாவது, எக்கொள்கையிட்டாவது ஏற்பட்டிருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றுமானால் ஸ்தாபன தலைவர்களுக்கு உடன் தெரிவித்து உங்கள் சந்தேகங்களை நிவிர்த்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்றும் பதிலளித்தார்கள்.

பத்திரிகைகள் சம்மந்தமாக கனம் அதிபரவர்கள் பதிலளித்ததிலிருந்து "ஓர் பத்திரிகை நிலை பெற வேண்டுமானால் பலருடைய அபிமானமும், ஒத்துழைப்பும், மூலதனமும் அவசியமென்றும், பத்திரிகையானது குறிப்பிட்ட தேதியில் தவறாது வெளி வருவதும், நிறைந்த விஷயங்களோடு மிகுந்த சந்தாதாருடன் வெளி வருவதும், பத்திரிகையின் விஷய அமைப்பும், தோற்றமும் ஓர் கவர்ச்சியை உண்டுபண்ணத்தக்கவையாயிருத்தல் வேண்டுமென்றும், கால நிலையறிந்து பத்திரிகையில் விஷயாதிகள் வெளிவர வேண்டுமென்றும் ஆகிய இவ்வளவு குறிப்புகள் அபிமானிகளின் உள்ளத்தில் உறுதிக்கொண்டிருந்ததுவும் வெளிப்படை. மேலும் பத்திரிகாதிபத்தியப் பொறுப் பேற்றுவரும் கனவான்கள் சிறிதும் சுயநலமின்றி பொது நல சேவையிலேயே ஈடுபட வேண்டும் என்றும் அபிமானிகள் தம் உள்ளத்தே கொண்டிருந்தனர் என்பதுவும் வெளிப்படை.

ஆகவே மேலே காட்டிய குறிப்புகளையே கொண்டு நிலவிவரும் "நாடார் குல மித்திரன்" நிலவுலகில் நீடித்து வாழ வேண்டுமென்றே "மித்திரன்" க்ஷேம நிதிக்குப்பேருபகாரம் புரிகின்றனர்.

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-14-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரிதை வருமாறு:—

காங்கிரஸ் கூடுவதற்கு இன்னும் இரண்டு நாட்களிருக்கின்றன. காங்கிரஸ் ஆபீஸில் ஊழியம்செய்து அநுபவம் பெறவேண்டுமென்று நான் சங்கற்பம் செய்துகொண்டிருந்தேன். ஆகையால் நான் கல்கத்தாவிற்கு வந்ததும் என்னுடைய கடன்களை முடித்துக்கொண்டு நேராக காங்கிரஸ் காரியாலயத்துக்குச் சென்றேன்.

பாபு பூபேந்திரநாத் வஸுவும் பாபு கோஸாலும் அந்த வருஷம் காரியதரிசிகள். நான் பூபேந்திரநாத் பாபுவிடம் சென்று வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர் என்னைப் பார்த்து என்னிடத்தில் வேலையில்லை; பாபு கோஸாலிடம் வேலையிருக்கலாம் அவரிடம் போங்கள் என்று சொல்லிவிட்டார்.

நான் அவரிடம் போனேன். அவர் ஒரு முறை என்னை ஏற இறங்கப்பார்த்துவிட்டு, 'புன் சிரிப்புடன்' உங்களுக்கு நான் குமஸ்தா வேலைதான் கொடுக்க முடியும்; அது உங்களுக்குச் சம்மதமா வென்று கேட்டார்?

பேஷாகச் செய்கிறேன். என்னுடைய சக்திக்கு மீறியதாக இல்லாத எந்த வேலையையும் செய்யத்தான நான் இங்கு வந்திருக்கிறேன் என்று சொன்னேன்.

"இதுதான் சரியானவழி" யென்று அவர் என்னிடம் சொல்லிவிட்டு, பக்கத்திலிருந்த தொண்டர்களைப் பார்த்து இவ்வுயர் சொல்லுவதைக் கேட்டீர்களா" என்று வினவினார்.

பிறகு என்னைப்பார்த்து "இதோ ஒரு கட்டுக் கடிதங்கள் இருக்கின்றன. அவைகளைப் பைசல் செய்யவேண்டும். பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து அந்த வேலையைக் கவனியுங்கள். நூற்றுக்கணக்கானவர்கள் என்னைப்பார்க்க வருகிறார்கள். நான் என்னசெய்வது? அவர்களுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருப்பதா? அல்லது நூற்றுக்கணக்காக எனக்குக் கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கிறவர்களுக்குப் பதில் எழுதுவதா? பதில் எழுதும் வேலையை ஒப்புவிக்கக் கூடிய குமஸ்தா என்னிடத்திலில்லை. பல கடிதங்களில் விஷயம் ஒன்றும் இருக்காது. இருந்தாலும் அவைகளை தயவுசெய்து கவனியுங்கள். முக்கியமான கடிதங்களுக்கு தாக்கல் எழுதுங்கள். யோசித்துப்பதில் எழுதவேண்டிய கடிதங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்று சொன்னார்.

என்னிடத்தில் அவர் அத்தனை நம்பிக்கைவைத்தது எனக்கு பரம சந்தோஷத்தைக் கொடுத்தது.

---

பிறகு, "இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்க"த்திற்குச் சேர்ந்துள்ள பணத்தைப் பற்றியும் குறிப்பிட்டவர் பலர். அப்பணம் எங்கிருக்கிறதென்றும், அதனால் இந்திய க்ஷத்திரிய நாடார்களுக்கேற்பட்ட நன்மையாதென்றும் சிலர் கேட்டனர். இதற்கும் கனம் அதிபரவர்கள் தக்க விடை கூறினார்கள்.

பிறகு, 20—3—27 ல் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு வடக்கன் குளம், கள்ளிக்குளம், காவல்கிணறு ஆகிய ஊர் வாலிப குலாபிமான கோஷ்டியினர் 22 பேர் கனம் அதிபரவர்களையும், அவர்கள் தம் சகாக்களையும் வைத்து ஓர் போட்டோப்படம் எடுத்தனர். கனம் அதிபரவர்களும், சகாக்களும் 21—3—27 ல் கந்தானை, நீர்கொழும்பு, மாதம்பை முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றனர்.

---

எனக்கு அந்தவேலையைக் கொடுத்த பொழுது நான் யாரென்பது அவருக்குத் தெரியாது. பிறகுதான் அவர் என்னுடைய யோக்கியதையைப்பற்றி விசாரித்தார்.

எனக்குக் கொடுத்தவேலையாவது, வந்த கடிதங்களைப் பைசல் செய்யும் வேலை. வெகு சுலபமானதாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் அவைகளைப் பைசல் செய்துவிட்டேன். பாபு கோஸாலுக்குப் பரமதிருப்தி ஏற்பட்டது. அவர் பெரிய வாயாடி. ஓயாமல் அவர் பல மணிநேரம் பேசிக்கொண்டேயிருப்பார். நான் இன்னுனென்று என்னை அவர் விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகு எனக்கு குமஸ்தா வேலையைக் கொடுத்ததற்கு அவர் வருத்தப்பட்டார். அதனால் பாதகமில்லை யென்று நான் அவருக்குத் தேறுதல் சொன்னேன்.

"அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது? நீங்கள் வெகு காலமாக காங்கிரஸில் உழைத்து வருகிறீர்கள். வயதிலும் என்னைவிட நீங்கள் மூத்தவர். நான் அனுபவமில்லாத யுவப்பிராயத்தினன் தான். இந்த வேலையையேனும் எனக்குக் கொடுத்ததற்கு நான் உங்களுக்கு நன்றி செலுத்தவேண்டும். நான் காங்கிரஸ் வேலையைச் செய்ய ஆசைப்பட்டேன். உள் விவரங்களைத் தெரிந்து கொள்ளக் கூடிய வேலையை எனக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்" என்று சொன்னேன்.

"இதுதான் சரியான வழி; இக்காலத்தியயுவர்களுக்கு இது தெரிவதில்லை. காங்கிரஸ் ஏற்பட்ட நாள் முதல் எனக்கு அதில் சம்பந்தமுண்டு. மிஸ்டர் ஹியூமுடன் சேர்ந்து காங்கிரஸை ஸ்தாபித்தவர்களில் நான் ஒருவனென்றும் சொல்லிக்கொள்ளலாம்" என்று சொன்னார்.

எங்கள் இருவருக்கும் இவ்விதம் சிநேகமேற்பட்டுவிட்டது. இடைவேளை போஜனத்திற்குத் தம்முடைய இடத்திற்கு வரும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

பாபுகோஸால் தமது ஷர்ட்டின் பொத்தான்களை வேறொருவரைக் கொண்டு போட்டுவிட்டுக் கொள்வது வழக்கம். நானே அந்தவேலையைச் செய்வதாகச் சொன்னேன். வயதில் மூத்தவர்களிடத்தில் எனக்கு மரியாதையிருந்ததால் அவர் வேலையைச் செய்ய எனக்கு ஆசை இருந்தது. அது அவருக்குத் தெரிந்தது முதல் அவருக்கு நான் அற்பஊழியங்களைச் செய்வதை அவர் ஆக்ஷேபிப்பதில்லை. அவருக்கும் அது திருப்தியாகவிருந்தது. பொத்தான்களைப்போட்டுவிடும்படி சொல்லி 'காங்கிரஸ் காரியதரிசிக்கு பொத்தான்களைப் போட்டுக்கொள்ளக் கூட அவகாசமில்லை. ஏதேனும் வேலை எப்பொழுதும் அவருக்கு இருந்து கொண்டேயிருக்கிறது" என்று சொல்லுவார். அவருடைய கபடமற்ற சுபாவத்தைக்கண்டு நான் ஆச்சரியப்படுவேன். எனக்கு அந்த வேலையைச் செய்வதில் அதிருப்தியுமிருக்காது. அத்தகைய ஊழியங்களைச் செய்ததால் நான் அடைந்த அனுகூலம் இவ்வளவு அவ்வளவு அன்று. சில தினங்களுக்குள் காங்கிரஸ் வேலை விவரங்கள் அனைத்தையும் நான் தெரிந்து கொண்டுவிட்டேன். பல தலைவர்களை நான் சந்தித்தேன். கோகலே, சுரேந்திரநாத் போன்ற பெரியவர்களுடைய நடவடிக்கைகளை நான் கவனித்துவந்தேன். அனாவசியமாகக் காலம் வியர்த்தம் செய்யப்படுவதையும் நான் கண்டறிந்தேன். அந்தக் காலத்திலும் ஆங்கிலத்தை அதிகமாக உபயோகித்து வந்தது எனக்கு அருவருப்பை உண்டுபண்ணிற்று. வேலையைக் குறைத்துக் கொள்ளுவதில் சிரத்தையையே அப்பொழுது காணோம். ஒரே வேலையைப் பலர் செய்துவந்தார்கள். பல முக்கியமான வேலைகளைக் கவனிப்பாரில்லை.

இந்தத் தவறுகளை நான் உணர்ந்திருந்தபோதிலும், அந்தப் பிசகுகளை மன்னிக்கும் பெருந்தன்மையும் என்னிடமிருந்தது. இதைவிட நன்றாக அந்த நிலைமையில் வேலைசெய்ய முடியாமலிருக்கலாமென்று நான் நினைத்தேன். அதனால் எந்த வேலையின் விசேஷத்தையும் குறைத்துக்கூற நான் விரும்பவில்லை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அருப்புக்கோட்டை, சொக்கலிங்கபுரம் தேவாங்ககுல முன்னேற்ற சபை.

1-வது வருடப் பூர்த்தி விழாவில்
"நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான்

# சூ. ஆ. முத்துநாடாரவர்கள்

## நிகழ்த்திய சொற்பெருக்கு.

(29—3—27)

நம்பாரத பூமியானது நீர்வளம், நிலவளம், மலைவளம் முதலிய பல்வளங்களும் மேலாக அமையப்பெற்றிருப்பதுடன் சீதோஷ்ண ஸ்திதியும் சர்வ ஜீவராசிகளும் சுகமாய் வாழ்வதற்கேற்ப ஸ்ருஷ்டிக்கப் பெற்றிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

அந்நிய நாட்டினர் பலர் நம் நாட்டைப் பொன் விளையும் பூமியென்றும் தேவ நாடென்றும் தொடர்ந்து வந்து குவிந்த வண்ணமாயிருக்கின்றார்கள். வரமுடியாதவர்களோ நமக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையேயென்று தவமிருந்து வருகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இவ்வாறு நம் நாடு ஏற்றம் பெற்றிருக்க நம்மிந்திய மக்களோ இரைதேடும் எறும்புக் கூட்டங்கள்போல் தினசரி வெளிநாட்டிற்குப் புறப்பட்டுப்போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

ஏனென்றால் வறுமை பொறுக்க முடியவில்லை; பிழைப்பிற்கிடமில்லை என்ற பதில் தாராளமாய்க் கிடைக்கிறது.

அது உண்மைதான். வறுமையெனுங்கொடிய வியாதி வரவர வளர்ந்தே வந்திருக்கிறது. 1919 ௵ ஒரு ரூபாய்க்கு இரண்டுபடி அரிசிகிடைத்த காலத்திலிருந்த கஷ்டத்தைப்பார்க்கிலும் 1927 ஆகிய இவ்வாண்டில் ரூபாய்க்கு 3, 4 படியரிசி கிடைத்தும் கஷ்டம் அதிகமாகத் தெரிகிறது. அநேகமான ஜனங்கள் பிழைப்பிற்கு வழியின்றி இடம்விட்டு இடம் மாறிக் கொண்டிருக்கின்றார்கள். நாலைந்து வருடங்களுக்குள் பொருளாதார நிலைமை குறைந்து வறுமைப்பிணி வெகுவேகமாய்ப் பரவியிருக்கிறதென்பது விளங்குகின்றது.

ஆனால் பக்ஷிகள் எப்போதும் போல் ஆகாயத்தில் வெகு உல்லாசமாய்ப் பறந்து திரிவதுபோல், நம் நாட்டில் பட்டம், பதவி, பெற்றவர்களுடையவும் சட்டசபைக் கனவான்களுடையவும் மோட்டார் வாகனங்கள் வெகு வேகமாய்ப் பறந்துகொண்டு திரிகின்றன. அப்பட்சிகளுக்காவது அக்கனவான்களுக்காவது ஒருபோதும் வறுமையில்லை. வறுமையில் வரும் சிறுமையும் தெரிவதில்லை. "தலைவலியும், நோவும் தனக்கு வந்தாலல்லவோ தெரியு"மென்ற பழமொழிக்கேற்ப வறுமையனுபவித்தவர்களுக்கன்றோ அது தெரியுமென்பது மிகையாகாது.

எல்லா நல்வளங்களும் பொருந்திய நம் நாட்டிற்கு இவ்வறுமை எங்கிருந்து வந்ததென்றால், அந்நிய நாட்டார் ஓயாமல் நம் நாட்டின் செல்வத்தைச் சுரண்டியெடுத்துக்கொண்டு போவதாலும் எந்த ஸ்தாபனங்களிலும் ஒரு வகுப்பார் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு பிற வகுப்பினரை நயவஞ்சகமாய்க் கொள்ளையடித்துக் கொண்டிருப்பதாலுமேயெனச் சொல்லப்படுகிறது.

சக்லத்வாலாபோன்ற மேனாட்டு மோகினிகள் இக்கொடுமைகளுக்கு ஆதரவாயிருந்து வருவதினாலுமேயென்றும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

எவ்வாறு நாட்டின் செல்வம் சுரண்டப்படுகிறதென்பது அம்மோகினிகளுக்குத் தெரியவே தெரியாது. நம் நாட்டின் இயற்கைவளமைப்புக்குமாறான யந்திரப்பிசாசுகள் குவிந்துகொண்டேயிருப்பதினாலும், நம் நாட்டிற்குமப்பிசாசுகள் மீதே அதிக ஆசையுண்டு கொண்டிருப்பதினாலும் வறுமை பல்வாறு தலைதூக்கியாடுகிறது.

நம் நாட்டிற்குப் பருத்தியாலை, நூலாலை நெசவாலைகள், வந்தது; கைமனையும், கைராட்டினமும், கைத்தறியும் விருத்திகுறைந்தது. மாவாலை, நெல்லாலைகள் பல வந்தன; நமது பெண்கள் பிழைப்புக்கெட்டது. அவர்கள் பலமும் போய்விட்டது. அவ்வரிசி யுண்பதாலநேக நோய்களும் வந்தன. இவ்விஷயமாய் "குடியரசு" சரியான புள்ளிவிபரம் போட்டுக்காட்டி வந்திருப்பதை யாவருமறிந்திருக்கக்கூடும்.

இம்மட்டோ, மோட்டார் வாகனங்களெங்குங் காட்டுத்தீபோற் பரவுகின்றன. நம்நாடெங்கும் புதுப்புது ரெயில்கள் போடப்பட்டு வருகின்றன. இதனால் நமக்கு ஒருவாறு நன்மையேயென்றாலும் இங்கிலாந்துக்கே அதிக நன்மை ஏற்படுகிறது. அங்கே இரும்புத் தொழிலுக்கு அதிக ஏற்றம் கிடைக்கிறது. நம்மிந்திய ரெயில்வே ஸ்டேஷன்களையெல்லாம் நோக்குங்கள். நம்நாட்டு மரத்திற்குப்பதிலாக இரும்பும் நம்நாட்டுச் சுண்ணாம்பு, மண், கல் முதலியவைகளுக்குப்பதிலாக வெளிநாட்டுச்சிமிண்டுமே உபயோகப்படுத்தப்பட்டுவருகின்றன. செங்கலும்கூட இங்கிலீஷ்கம்பெனிகளிலிருந்து வருவதாய்ச் சொல்லப்படுகிறது. இவ்வாறு இந்திய ரெயில்வே கம்பெனிகளிலெல்லாம் இந்தியச்சாமான்கள் மருந்தாய்ப் போய்விட்டன. அந்தோ! இதுயாருடைய பணம்? இந்தியருடையது. இதனால் யாருக்குலாபம்? இங்கிலாந்துக்கு. இதனால் தொழில் எங்கே விருத்தியாகின்றது? இங்கிலாந்தில். இதனால் யார் பட்டினிகிடக்க நேருகின்றது? இந்தியர்கள்.

இவ்வியந்திரப் பிசாசுகளுக்கு நம்நாடு ஏற்றதாயில்லை; அப்பிசாசுகள் கோருவதைக்கொடுக்க நமக்கு சாதகமில்லையென்பதையறியாது ஒரு சார்பார் பிடித்தபேய்க்கு வகைசொல்லித்தானே தீரவேண்டுமென்று மகாத்மா காந்தியடிகளின் சொற்கேளாப்பிள்ளைகளாய் ஆடம்பரத்தில் மூழ்கின்றமையால் நமது சாதாரணஜனங்களுங்கூட அம்மோகமே தாகமாய் அனுசரிக்கப் பிரியப்படுவதினாலே வறுமையும் பிணியும் நிலைநிற்கப் பிரியப்படுகிறது. இவ்வறுமையை எவ்வாறு விலக்கலாமென்பதில் தேசம் பலதரப்பட்ட அபிப்பிராயமுடையதாயிருந்து வருகிறது.

மகாத்மாகாந்தி சொல்லும் நல்வழிகளை சக்லத்வாலா தவிர மற்றெல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மகாத்மாகாந்தி நம்முடைய செல்வம் சுரண்டப்பட்டு நாம் தரித்திரமடைவதற்குக் காரணமாயுள்ள அரசாங்கத்தை நாம் சண்டைசெய்து வெல்வதரிது; சண்டையால் மண்டையுடைவதும் தகாது; சாத்வீக எதிர்ப்பை நாடுங்கள்; ஒத்துழையாப்போர் தொடுங்கள்; எதிரிகளும் பணிந்துபோவார்கள் என்றார். நம் குடிசைத்தொழிலை விருத்திபண்ணுங்கள்; அடிமைத்தனம் ஒழியும்; கைராட்டினமும் கைத்தறியும் தரும் பெருகினால் மான்செஸ்டர்க் கொள்ளையொழியும் என்றார்.

ஆடம்பரத்தை விடுங்கள்; தரித்திரத் தோழன் சாவான்; கட்குடி நின்றால் நற்குடிவளரும்; தீண்டாமையை வேண்டாமென வெறுத்துத் தள்ளுங்கள்; எல்லோரும் சிக்கனமெனும் லக்குமியை நேசியுங்கள் என்றார்.

உண்பதொருபிடி; உடுப்பது நான்குமுழம்; வசிப்பதுகுடிசை; படிப்பது சன்மார்க்கம்; அடைவது மோட்சம் என்பதே மனிதன் கடமையாய்க் கொள்ளுங்கள். நிவர்த்திதேவி நிச்சயம் தெரிசனமாவாள்; வேண்டும் வரமீவாள் என்று விளம்புகிறார்.

மகாத்மா இதைச் சொன்னதற்காக அடியும் உதையும்பட்டார். அரசாங்கச் சிறைவாசமும்பெற்றார். வட இந்தியப் பார்ப்பனரொருவர் சித்திரவதை செய்யவேண்டுமென்றார். தென்னிந்தியப் பார்ப்பனரொருவர் மண்டையில் மூளையில்லையென்றார். அடிகள் அஞ்சினரோ? இல்லை. நெட்டாலில் முட்டாள்கள் செய்தது கஷ்டமேயானாலும் சகிப்பதே கடமையெனக்கொண்டார். பஞ்சாங்கப் பார்ப்பனர் தீண்டாமை தீர்வதை ஒவ்வி அத்தீமை தீர்வதானால் தாம் சித்திரவதை செய்வதற்குடன்படுவதாயுங் கூறினார். மக்களுக்குக் கஷ்டம் விளைவித்தமலையின் சிறகை வீழ்த்த வானவர்தலைவனுக்கு தன் முதுகெலும்பைக்கொடுத்த ததீசிமுனிவரைப்பெற்ற தாய் நாட்டின் தவப்புதல்வரென்பதைக் காட்டியவுடனாவது அப்பார்ப்பனர் அவர்வழிக்கு வாராததுபற்றி யார்தான் வருந்தார்!

கனவான்களே! மணிக்கு 100 மைல் வேகத்தில் ஆகாயத்தில் பறக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் கையால் நூற்று நெய்து கொள்ளமுடியுமா? காந்தி சொல்வது சரியாஎன்று இன்னும் அநேகர் திகைக்கின்றார்கள். ஆனால் அக்காலத்தில் அனுமான் 1000 மைல் வேகத்தில் ஆகாயத்திற் பறந்தான் என்ற தத்வம் படித்தவர்களுக்கு இது ஆச்சரியமாகத் தோனுவதில்லை.

நம் பாடசாலைப்படிப்புகளே நம்மைக் குருட்டுத்தனமாக்கி வருகின்றன. கழுதைகத்தும்; நாய் குலைக்கும் என்பதே குழந்தைகளின் ஆரம்பப்படிப்பாயிருந்தால் தேசப்புனருத்தாரணத்தை அவர்கள் எப்படிச் சிந்திக்கமுடியும்? அதற்காகத்தான் மகாத்மா தேசிய கலாசாலையைத் திறக்கச் சொல்லுகிறார்.

நூறு வருஷங்களுக்கு முன் நமது கைத்தொழில் முறை எப்படியிருந்தது என்பதை எந்த மாணவருக்காவது போதிக்கப் படுகிறதா? இல்லை.

கனவான்களே! பதினேழாவது நூற்றாண்டில் நம்மிந்தியாவை அவுரங்கசீப் ஆண்டுவந்த காலத்தில் மிக அழகும், மிக மலிவுமுள்ள இந்திய சல்லாக்களும் மஸ்லீன்களும் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டன. டக்காவிலிருந்துமட்டும் வருஷத்தில் இங்கிலாந்துக்கு 30 லட்சம் ரூபாய்க்கு மஸ்லீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் எந்தக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போனார்கள்? இந்தியர்கள் செய்த இந்தியக் கப்பலிலே ஏற்றிக்கொண்டு போனார்கள். அப்போது இக்கப்பல்களைக் கண்ட இங்கிலாந்தின் நெசவுத்தொழிலாளர்கள் இங்கிலாந்தை முற்றுகைபோட வந்துவிட்டதாக எண்ணிப்பயந்தார்கள். 1700–701-ல் இங்கிலாந்தில் சில தினுசுகளைத் தவிர மற்ற சல்லாத் தினுசுகளை உடுப்பாகவும் வேறுவிதமாகவும் உபயோகப்படுத்தலாகாதென்ற இரண்டுசட்டங்கள் செய்தார்கள். இதனால் பருத்தி சம்பந்தப்பட்ட வஸ்திரங்களைத் தடுத்துவிட்டது.

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி ஸ்திரமாய் ஏற்பட்ட பிறகும் நமது வியாபாரங்கள் இங்கிலாந்துக்குப் போய்க்கொண்டுதானிருந்தன.

இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட வஸ்திரங்களின் விலையைப்பார்க்கிலும் இந்தியவஸ்திரங்களை நூற்றுக்கு 50—60 குறைவாக விற்று லாபமடையக் கூடுமென்று 1813-௵த்தில் நடந்த விசாரணையில் சாட்சிசொன்னார்கள். அதன் பிறகு இந்திய ஜவுளிகளுக்கு நூற்றுக்கு 70—80 ரூபாய் இறக்குமதிரூபாய்வரிவிதிக்கப்பட்டது. இதைப்பற்றி ஸர் ஹென்ரி காட்டன் ஒரு சிறு குறிப்பு எழுதியுள்ளார். அதாவது:—

சுமார் நூறு வருஷங்களுக்குப்பிந்திய காலத்தில் டக்காவில் இரண்டு லட்சம் ஜனங்களிருந்தார்கள். ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் வருஷந்தோறும் விற்பனையாகிவந்தன. வருஷத்தில் 30 லட்சருபாய்க்கு இங்கிலாந்திற்கு மஸ்லீன் ஏற்றுமதி செய்து வந்ததானது 1817-௵ல் அந்த ஏற்றுமதி திடீரென்று முற்றிலுமின்று போய்விட்டது. பல ஜனங்கள் பிழைப்புக்குறைவிடமாயிருந்த நூற்கும் தொழிலும் நெய்யும் தொழிலும் நின்றுபோகவே ஸ்ரீமான்களாயிருந்தவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நாட்டுப்புறங்களுக்குச் சென்றுவிட்டனர். 1890-௵ல் 79 ஆயிரம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள். டக்காவில் மாத்திரமன்று, இதர ஜில்லாக்களிலுமப்படியே என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மகாஜனங்கள் நமது கைராட்டினமும் கைத்தறியும் குறைந்து போனதினால் டக்காவில் மட்டும் 73 வருஷங்களுக்குள் ஒரு லட்சத்து இருபத்தோராயிரம் ஜனங்கள் வெளியேறிவிட்டார்களென்றால் நாட்டின் மொத்தஜனத்தொகைவீதாச்சாரப்படி எவ்வளவிருக்குமென்பதையூகித்துக்கொள்ளுங்கள்.

கைராட்டினத்தையும் கைத்தறியையும் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்பது சரியான யோசனையா? அதை ஒரு தொழிலாக அனுஷ்டானத்தில் கொண்டுவரக்கூடுமா? நமக்குத் தேவையான வஸ்திரங்களை நாம் அந்நூலைக்கொண்டு செய்து கொள்ளக்கூடுமா? அதன் பலனாக நமது வறுமை தீருமா என்று யோசிப்பவர்கள்மேலே சொல்லிய விஷயங்களையும் கவனித்துப் பார்க்கட்டும். ராதாகுமுதமுக்கர்ஜி, ரோமச்சந்திரதத்தர் இவர்கள் எழுதிய சரித்திரங்களைப் படித்துப் பார்க்கட்டும்.

கனவான்களே! அடிகள் சொல்பவைகளே சரியென்று உலகமே ஒப்புக்கொள்ளுங்காலம் வந்துகொண்டிருக்கிறது. அம்மணி யோசையுங்கேட்கிறது. இன்னும் முட்டுக்கட்டை போடுவோமென்று சட்டசபைக்குள் நட்டுக்கெட்டு நிற்கும் பேர்வழிகள் பட்டம் பதவி மோகத்தை விட்டொழித்து மகாத்மாவைப் பின்பற்றிவருவார்களானால், நாட்டின் வறுமை இன்றே விலகுமென்று நம்பலாம். நாமும் வறுமை வறுமையென்று வாளாவிராமல் வறுமைப் பிணியகலும் மருந்து கதர் தீண்டாமை மதுவிலக்கே என்ற மகாத்மாகாந்தி முக்கிய திட்டங்கள் நிறைவேற நாமொவ்வொருவரும் நம்மாலானதைச் செய்ய வேண்டும்.

நம் தென்னாட்டிற்கும் மகாத்மா காந்தி சமீபத்தில் வரப்போகிறார். நாமும் அவர்களை அன்புடன் வரவேற்கும் பாக்கியம் பெற முடியாமல் அவர் பிரயாணத்தில் சில விதிகளேற்படுத்தியிருக்கிறார்கள். ஆயினும் அவரை வரவேற்றுபசரிப்பதைப் பார்க்கிலும் அவர் உபதேசப்படி நடப்பதும் நடக்க முயல்வதும் யாவரையும்நடக்கச்செய்வதுமே அவருக்குநாம்செய்யும் மரியாதையும்மேலான உபசரிப்புமாயிருக்குமாகையால் துன்பந்தீர்ந்த தீபாவளி நாளில் புது வஸ்திரங்கட்டிக் கொண்டாடுவதுபோல் நமது துன்பந்தீர்க்கவரும் மகாத்மா காந்தி நமது ஜில்லாவிலெங்கேனும் வந்திறங்கும் அந்நாளில் எல்லோரும் கதரணிந்து மகாத்மாவை மனதில் தியானிப்போமாக.

## கண்ணப்பர் வழக்கு.

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயிலுட் செல்ல ஸ்ரீமான் கண்ணப்பரவர்களைத் தடை செய்ததின் நிமித்தம் தொடுக்கப்பட்ட கேஸ் ஒரு பிராமண மாஜிஸ்ட்ரேட்டிடம் தாக்கல் செய்யப்பட்டிருந்ததை ஒரு முகமதிய, அல்லது கிறிஸ்தவ, அல்லது ஒரு ஐரோப்பிய அதிகாரிக்கு மாற்றிவிடவேண்டுமென்று வாதியாகிய ஸ்ரீமான் கண்ணப்பர் கேட்டுக்கொண்டபடி திருவண்ணாமலை டிப்டி கலெக்டர் திரு. மத்தே பி. எ. அவர்களால் விசாரிக்கப்படும்படி உத்தரவாகியிருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ பங்குனி மீ ௰௫ உ

# இதுதானா முட்டுக்கட்டை?

சுயராஜ்பக்கட்சியார் தாங்கள் சட்டசபைக்குள் பெரும்பாலோரானல் உள்ளிருந்து ஒத்துழையாமை செய்வோம்; முட்டுக்கட்டை போடுவோம்; அரசாங்கத்தை நடைபெறவிடாமல் ஆட்டிவைப்போம்; எந்தமந்திரிசபையையும் உடைத்தெரிவோமென்று ஓட்டர்களுக்கு உறுதிகூறினார்கள். காங்கிரஸிலும் அதற்கேற்றவாறு தீர்மானமும் செய்து கொண்டார்கள். ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாசய்யங்கார், ஸி. ராஜகோபாலாச்சாரியார் இருவரும், சுயராஜ்யக்கட்சியார் சொன்னபடி செய்வார்களென்று நற்சாட்சி கொடுத்தார்கள். இவர்களுடைய யோக்கியதையும் பார்த்துவிடலாமென்றே நமது தேசத்தார்கள் தங்கள் வாக்குகளைக் கொடுத்து அனுப்பிவைத்தார்கள்.

இப்போது அவர்கள் சொன்னபடி நடக்கிறார்களா? இல்லை. தற்பேர்துள்ள மந்திரிகளைத் தாங்குகிறார்கள். அவர்களுடைய பதவி பறிமுதலாய்ப் போய்விடாமல் பாதுகாக்கிறார்கள். அவர்களுக்கு வக்கலாத்து வாங்கி வந்த வக்கீல்களைப் போல் வாதம் நடத்துகிறார்கள். 3841 லட்சத்தில் 100 ரூபாய் குறைக்க வேணுமென்ற தீர்மானங் கொண்டுவந்து அதைநிறைவேற்றிவிடுவதுதானா கடமை? இதனால் மந்திரிகள் வேலை நடக்காதா? அரசாங்கம் ஆடிப்போகுமா? இதுதானா முட்டுக்கட்டை? என்று கடாவுகிறோம்.

மந்திரிகள் மூவரும்முன்னுக்குப்பின் முரணாகப் பேசிவருகிறார்கள். கலால் மந்திரியோ தம்முடைய சுற்றுப்பிரயாணத்தில் மதுவிலக்கைப்பற்றி ஒரு கொள்கையும் ஸ்திரமாயில்லாதவாறு பேசிவந்திருக்கிறார். சட்டசபையில் பத்து வருஷம் தவணைபோடுகிறார். எப்படி விலக்கலாம்; எவ்வாறு செய்யலாமென்பதைப்பற்றி ஆலோசனை செய்கிறதாகச் சொல்கிறார். சோதனைபோட்டுப் பார்ப்போமென்று சொல்லுகிறார். இப்படியாவது சொல்கிறார்களே; குடியை நிறுத்த முடியாது போனாலும் அதில் எங்களுக்கனுதாபமுண்டு என்றாவது சொல்லுகிறார்களே; ஆதலால் பழய மந்திரிகளுக்கு இவர்கள் பரவாயில்லையென்று சொல்வதுதானா முட்டுக்கட்டையென்று கேட்கின்றோம்.

பழய மந்திரி பாடத்தில் ஏதாவது பிசகாய்ச்சொல்லுகிறார்களா? ஸர். பாத்ரோ இருபது வருஷமென்றார். கனம் ஆரோக்கியம் பத்துவருஷமென்கிறார். இவர்களை யாதரிப்பதுதானா முட்டுக்கட்டையென்று கேட்கின்றோம்.

பழய மந்திரிகளை நட்சேத்திர ஐயர்களைப்போல் படாதபாடு படுத்தின ஐயரும் ஐயங்காரும் புது மந்திரிகளை முத்தங்கொஞ்சுவதோடு நில்லாமல், பழையவர்கள் மீது இன்னும் சீறிப்பாய்கின்றார்கள். மதுவிலக்குக்கு விரோதமாகப் பழயவர்களிருந்துவந்ததினால் தேச முன்னேற்றம் தடைப்படுவதற்காக அவர்கள் மீது பாயவில்லை. அது உண்மையானல் ஸ்ரீராஜகோபாலாச்சாரியாரே மந்திரியாக வந்தாலும் குடியை நிறுத்தமுடியாதென்ற திரு. கெ. வி. ரெங்கசாமி ஐயங்கார் மீது பாய்ந்திருக்கவேண்டும். கானடாவிற்போய் தென்னை மரங்கள் தீர்ந்தாலும் கட்குடி யொழியாதென்ற திரு. விஜயராகவாச்சாரியார் மீது சீறி விழுந்திருக்கவேண்டும். காரணமில்லாத இவ்விவாதங்களை யார் நம்பக்கூடும்?

பூரண மதுவிலக்கு சாத்தியந்தானென்றும், 10 வருஷங்களுக்குள் அதை நிறைவேற்றி வைக்க விரும்புவதாகவும், அவ்வாறே வாக்குறுதிகொடுப்பதாகவும், இரட்டையாட்சிசாத்தியமானதல்லவென்றும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் சொல்லுவாரானல் இந்த மந்திரி சபையை ஒழித்துவிடுவோமென்று திரு. சத்தியமூர்த்தி சொல்லுகிறார். இது வாயாடித்தனமேயன்றி யோக்கியப் பொறுப்பான பேச்சாக இல்லை. ஜஸ்டிஸ் கட்சிதான் அரசாங்கத்தை ஆதரிக்குங்கட்சி; மதுவிலக்க வழிசெய்து தராத கட்சி; அது பிற்போக்கான கட்சி; அதனால் யாதொரு பிரயோசனமுமில்லையென்று சுயராஜ்யக்கட்சி தம்பட்டமடித்துவந்தது. அதைநம்பி ஜனங்களும் ஜஸ்டிஸ் கட்சிதோற்றுப்போகச் செய்து விட்டார்கள். சட்டசபையில் முன்னணியிலிருந்த அவர்களும் ஒரு மூலையிலிருந்துவருகிறார்கள். இன்னும் அவர்களை இழுத்து வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லட்டும் என்று கேட்பது சம்பிரதாயமல்லவா? யோக்கியர்களானல் வாக்குறுதிப்படி நடக்கவேண்டும்; அல்லது வெளியேறி விடவேண்டுமென்ற பிரியமிருந்தால் மரியாதையுடன் அதிகாரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசையாவென்று கேட்கின்றோம்.

மற்றொரு ஐயங்கார் மதுரை மகாநாட்டை அறிவாராம். அங்கு மிங்கும் ஓடிகதரைவாங்கிக் கட்டி வேஷம் போட்டார்கள்; நாறிப்போன கொட்டிலைக் கழுவிவிட்டு நல்ல மாட்டைக்கட்டுவோம்; அடுத்த வருஷம் பார்ப்போமென்று வீரம் பேசியிருக்கிறார்.

மதுரை மகாநாடு கதரை ஆதரித்த பிறகுதான் சுயராஜ்யக்கட்சிக்குச்சரியான புத்தி வந்து அஸாமில் கட்டாயம் கதர் கட்டுவதை ஒப்பினார்களென்பதை இவர் மறந்துவிட்டார். ஜஸ்டிஸ் கட்சி அதிகாரம்பார்த்த 6 வருஷங்களுக்குமுன் ஏகபோகமாய் எல்லா அதிகாரங்களையும் வகித்து பணத்தைக்கொள்ளையடித்து நாட்டை நாறிப்போகச் செய்த நாற்றத்தை மாற்றுவதற்குக்கூட 6-வருஷங்கள் போதவில்லை. இவர்களும் நாற்றத்தை மாற்றி மாடு கட்டுவதற்குள் வேறொரு மாடு வந்து புகுந்தாலும் புகுந்துவிடுமன்றோ!

ஜஸ்டிஸ் கட்சி அதிகாரத்திலிருக்கும்போது குடியை நிறுத்தப் பிரியப்படவில்லை. இன்று பூரண மது விலக்கை விரும்புகிறது. இதைப்பற்றி சுயராஜ்யக் கட்சி ஏளனம் செய்கிறது. இதென்ன கொடுமை! குடிக்கிறவன் குடியை விட்டுவிடுகிறேனென்றால் அவனுக்கொரு கும்பிடுபோட்டாலன்றோ நன்று. நேற்றுக் குடித்தவன்தானே என்று சொல்வது யோக்கியமாகுமா? ஜஸ்டிஸ் கட்சி அதிகாரத்திலிருந்து கீழிறங்கட்டும்; கதரையும் மதுவிலக்கையும் ஆதரிக்கட்டுமென்று தானே சுயராஜ்பக்கட்சியார் அவர்களைக் கேட்டார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டபோது கேலி செய்வது முறையா? நேற்றுக் குடிக்காதரவு செய்தவன் இன்று மறுப்பது முட்டாள்த்தனமென்றால் நேற்று இவர்கள் சட்டசபைக்குள் நுழையமாட்டோமென்று சொல்லிவிட்டு இன்று நுழைந்ததும், நேற்று கதர் கட்டாயம் கட்டமாட்டோமென்று சொல்லி இன்று கட்டினதும் முட்டாள்த்தனமல்லவா?

இரட்டையாட்சியைக் கொல்லத்தகுந்த காலம் தெரியும் என்று திரு. சத்தியமூர்த்தி சொல்லிவிட்டார். தமக்கு காலம் இன்னும் இரண்டு வருஷங்கள்தானிருக்கிறதென்பதை திரு. மூர்த்தி அறிந்திருக்கட்டும். இதனால் சுயராஜ்யக்கட்சிக்கு சுயேச்சைச் சன்னிதோஷம் பிறந்துவிட்டதெனக்கூறலாம்.

திரு. மூர்த்தியும் அவர் சகாக்களும் தங்கள் வாக்குறுதிப்படி நடவாமலிருப்பதால்தேசத்துக்குத் துரோகம் செய்தவர்களாக நேரிடும் என்பதை அவர்கள் உணரவேண்டும். இவர்கள் மகாத்மா காந்தி சொற்படியும் கேளாமல் தாங்கள் சொன்னபடியும் நடக்காமலிருப்பது சுயநலத்தாலெனச் சொல்வது மிகையாகாது மூன்று மந்திரிமார்களிடமும் மாதம் 1000-ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு மந்திரிகளைத் தந்திரமாய் ஆதரித்து வருவதுபோல் சென்ற வாரத்தில் 'குடியரசு' ஆசிரியர் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமிநாயக்கர் அவர்கள்பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பது உண்மையாயிருக்கலாமென்று நம்ப இடங்கொடுக்கிறது. இதெல்லாம் யோக்கியமாகுமா? முட்டுக்கட்டையாகுமா? வென்று கேட்கின்றோம். பழய மந்திரிகள் செலவினங்களைக் குறைக்க வேண்டுமென்றால் முடியாதென்று பதிற் சொன்னார்களாம். புது மந்திரிகள், குறைக்க முடியுமாவென்று கவனிக்கிறோமென்று பதில்சொல்லுகிறார்களாம். சுயராஜ்யக்கட்சிக்கு உச்சி குளிர்கின்றதாம். மாடென்றாலும், பசுவென்றாலும் ஒன்றே; ஆனால் தொனி இறங்கிக் காட்டக்கூடும். தேசியக்கட்சியின் இறங்கிய தொனிக்குள் சுயராஜ்யக் கட்சி புதைக்கப்பட்டுவிட்டது. முட்டுக்கட்டை யென்பது வெட்ட வெளிச்சமாய்விட்டது. சுயராஜ்யப்பத்திரிகைகளும் அவர்கள் ஆட்டத்திற்குத் தக்கவாறு தாளம் போட்டுவருகின்றன. அவைகள் கூறுவதுதான் நியாயமென்று நம்பி மோசம்போய்விடாமல் சரியான நியாயங்கள் எவை என்பதை சீர்தூக்கிப் பார்ப்பார்களென்று நம்புகின்றோம்.

---

## மகாத்மாவின் பதில்.

ஸ்ரீமான் சக்லத்வாலாவின் கடிதத்தை நான் ஒரு தேசாபிமானியின் கடிதத்துக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு மதிப்புக் கொடுத்துப் பூராவாகவும் வாசித்துப் பார்த்தேன். அதாவது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள எவ்வளவோ முயற்சித்தும், என்னால் அதை அங்கீகரிக்கக்கூடவில்லை. நமது தேவைகளை அங்கீகரித்துக்கொண்டு போவதாலும் இயந்திரங்களை அதிகரிக்கச் செய்வதாலும் நமது லக்ஷியம் கைகூடுமென அவர் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. எனது தவறுகள் என அவர் எவற்றை எடுத்துச் சொல்லுகிறாரோ அவை தீவிர ஆராய்ச்சியுடன் நான் ஏற்றுக்கொண்ட முடிவுகளாகும். பர்டோலியில் நான் சற்றுப் பின்வாங்கியது புத்திசாலித்தனமான காரியமென்றே சொல்லுகிறேன். நாட்டிற்கு அது ஒரு சேவையுமாகும். இராஜப் பிரதிநிதிக்கு இறுதிக்கடிதமாக அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தில் கண்ட நிபந்தனைகளெல்லாம் சௌரிசௌரா சம்பவத்துக்குப் பிறகு நான் நிறைவேற்றியிருப்பேனானல் எனது லக்ஷியம் கைகூடியிருக்கும். தென்னாப்பிரிக்கா இயக்கம் தவறிவிட்டதாக எனது தோழர் கூறியிருப்பது தவறு. வாழ்நாளில் நான் செய்ய வேண்டிய வேலை தென்னாப்பிரிக்காவில் தான் ஆரம்பமாயிற்று. சென்ற யுத்தத்தில் எனது நாட்டினரை உதவும்படி நான் சொன்னது அப்போது எனக்கிருந்த உணர்ச்சிக்கேற்ப தவறு ஆகாது. கதர் இயக்கம் குன்றி வருவதாகச் சொல்வதும் தவறு. கதர் இயக்கம் இயந்திரத் தொழிலை நசுக்க ஏற்பட்டதன்று. அது விசேஷமாகப் பெருகுவதைத் தடுக்கவே ஏற்பட்டிருக்கிறது. இயந்திரத் தொழிலில் ஏழைகளுக்கு சில அணுக்கள் கிடைத்தாலும் மற்றுஞ் சிலருக்கு அது ரூபாயாகக் கொடுக்கிறது. எனது வேலைக்காக நான் ஏழைகளிடத்தும் பணக்காரரிடமிருந்தும் நன்கொடை பெறுகிறேன். ஏழைகள் மனமுவந்து கொடுக்கிறார்கள். இதனால் எனக்குக் கவுரவமில்லை. அஹிம்ஸா தர்மத்தின் வெற்றியையே அது காட்டுகிறது. யாருடைய கொள்கையை நான் எதிர்க்கின்றேனோ அவர்கள் எப்பொழுதும் என்னிடத்தில் அன்புசெலுத்தவதுண்டு. தொழிலாளர்கள் கட்டுப்படுவதை நான் வேண்டாமெனச் சொல்லவில்லை. இந்திய முறையில் அவர்களின் ஸ்தாபனங்கள் கட்டப்படவேண்டும். நான் அவ்விதம் நடத்தி வருகிறேன். முதலாளிகளைத் தொழிலாளிகளுக்கு விரோதிகளாக நான் பாவிப்பதில்லை, முதலாளிகளாயும் ஒன்று கூட்டித் தொழிலாளருக்கு ஆதரவு அளிக்கும்படி செய்வது சாத்தியமென நான் அபிப்பிராயப்படுகிறேன். ஒருவரிடத்து அதிக செல்வமும் மற்றவர்களிடம் ஒன்றுமில்லாமலிருப்பது கூடாதென்பது எனது கொள்கை. இப்போது அப்படித்தானிருக்கிறது. ஆகவே சரிசமமான செல்வப் பழக்கத்துக்கே நான் பாடுபடுகிறேன். கதர் மூலம் அதைச் சாதித்துவிடலாமெனபது எனதபிப்பிராயம். கதர் அபிவிருத்தியால் பிரிட்டிஷாரால் இந்நாட்டுப் பொருள்களைச் சுரண்டிக்கொண்டுபோவது குறையும். அப்போது பிரிட்டனோடு இந்நாட்டுக்குள்ள சம்பந்தம் பரிசுத்தமாகும். இதனால்த்தான் நான் கதர் சுயராஜ்யமளிக்குமென்று சொல்வது.

'மகாத்மா' என என்னை அழைப்பதைப்பற்றி தோஷம் பிரஸ்தாபிக்கிறார். அது எப்படியானாலும் ஆகட்டும் எனக்கு அக்கரையில்லை. என்னை மகாத்மா என அழைப்பதும், என் காலைத்தொட்டுக்கும்பிடுவதையும் குற்றமான காரியங்கள் என ஒரு மசோதா கொண்டுவரப்பட்டால் நான் ஒத்துழையாமைக் காரனானாலும் அதை ஆதரிக்கத் தயாராகவிருக்கிறேன். எனது சபர்மதி ஆஸ்ரமத்தில் எனதிஷ்டம் சட்டமாகவிருக்கிறது. அங்கு மகாத்மா என அழைப்பது குற்றமாகவே பாவிக்கப்படுகிறது.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## திருநாளைத் திருநாளாக்க வேண்டாமா?

காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது—திருக்
[குறள்

திருநாள் என்பது அழகிய நாள் அல்லது லக்ஷ்மீகரம் பொருந்திய நாளாகும். பொங்கல் பண்டிகை வந்து விட்டது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுவாசல்களைச் சுத்தஞ் செய்வதும் வெள்ளை பூசுவதும் பட்டை போடுவதுமாகிய வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டோம். பிரார்த்தனை செலுத்த வேண்டியவர்கள் விரதம் ஆரம்பித்துவிட்டார்கள். சகல ஜனங்களின் உள்ளத்திலும் அம்பிகையைத் திருப்திசெய்ய வேண்டியகவலையே மிகவும் வியாபித்து வேலைசெய்கிறது. விரதகாலத்தில் பால் பழம் மாத்திரம் புசிப்பதும், ஒருவேளைமாத்திரம் உண்பதும் வழக்கம். அக்காலத்தில் வாழையிலையில் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் வாழை, மேற்கிளையில்லாதமரம் அல்லவா? அதன் இலையை வெட்டினால் அதற்கே பழிவுவரலாம், ஆகையாலேயே வாழையிலையை உபயோகப்படுத்தக் கூடாதென்றிருப்பதாகத் தெரிகிறது. வேறு காரணங்களுந் தெரியவில்லை. அவ்வளவு காருண்யத்துடன் விரதங்கள் அனுஷ்டிக்கப்படுவதால், தூய்மையும் பரிசுத்தமுமாக எங்கும் விளங்குகிறது. வேப்பிலை மாவிலை முதலிய தோரணங்களும் நமது கண்ணைக் கவர்ந்து மனதை உற்சாகப்படுத்துகிறது. மேலும் மேலும் அம்பிகையின் பேரில் பக்தியையும் பரவசத்தையும் உண்டாக்கி ஆனந்த சாகரத்திலாழச் செய்கிறது. இந்த நாட்களெல்லாம் திருநாள் என்பதில் எவ்வித ஆக்ஷேபமுமில்லை. பொங்கலிரவுமுதல் வலியவர்களால் எளிய ஜீவராசிகளுக்குத் துன்பம் ஆரம்பமாகிறது. அம்மா! அம்மா! என்னும் ஆடுகளின் சப்தமும் படபட வென்றடித்துக் கொண்டு ஹா! ஹா! வென்று கத்தி உயிர்விடும் கோழிகளின் சத்தமும் கல்மனதுங் கசிந்துருகச் செய்யுமென்பதில் ஐயமில்லை. மறுநாள் காலை முதல் கோவிலின் முன்பும் வீடுகளின் முன்பும் இரத்த ஆறு வோடுகிறது. முன்னிருந்த இன்ப வெள்ளமான து தலைகீழாகிறது. எங்கும் பரிசுத்தமாயிருந்ததற்குப்பதில் அசுத்தமும் இரத்தக்கவிச்சும் வீசுகிறது. வலியவர்களின் சந்தோஷத்துக்கோ அளவில்லை. பருந்துகளும் காக்கைகளும் எங்கும் வட்டமிடுகின்றன. வேப்பிலை, மாவிலைத் தோரணங்களோடு, எளிய பிராணிகளின் மாமிசத்தோரணமுங் கட்டப்படுகிறது. எங்கும் யுத்தகளம் போலத் தோற்றுங்காட்சி பரிதபிக்கத்தக்கது. இயற்கையிலேயே அழகிய மனதுள்ள குழந்தைகள் மனதுங்கூட கல்லாய்விடுகிறது. திருநாளுக்காகச் சுத்தஞ் செய்தவீடும், பாத்திரங்களும் துர்நாற்ற மடிக்கிறது. நாவின் சுவையானது மூக்கின் செயலையும் கெடுத்துவிடுகிறது. ஆயினும் சிலருக்காவது இவ்விததுர்க்கந்தங்களும் அசுத்தங்களுந் தெரியாமலில்லை. தெரிந்தும் பிரயோஜனமென்ன? உரிய காலத்தில் உண்மையை வெளியிடக்கூடாதா? நியவழக்கங்களை, அன்பில்லாத வழக்கங்களை, மாற்றக் கூடாதா? தூயவாழ்க்கை நடத்தவேண்டுமென்று சொல்லக் கூடாதா? அன்பர்களே! பெரியோர்களே! கொஞ்சநேரமாவது வாயில்லாப்பிராணிகளின் கூக்குரலுக்குச் செவிகொடுக்கலாகாதா? முதலாவதுள்ள நாட்களும் எவ்வளவு அழகாய், அன்புமயமாய்த் திகழ்ந்தது! பின்னுள்ள நாட்களும் அதுபோல அன்புமயமாய் ஆனந்தக் காட்சியாயிருந்தாலன்றோ திருநாளாகும். அசுத்தமும் துர்நாற்றமும் நிறைந்தநாள் திருநாளாகுமா? எளியவாயில்லாப் பிராணிகள் துன்புறுத்திக் கொல்லப்படும் லக்ஷ்மீகரமில்லாதநாள் திருநாளாகுமா? கன் திருநாளாகுமா? இவைகளையெல்லாம் பராசக்தி நல்ல நாளென்று கருதி மகிழ்வாளென்று கனவிலுங்கருத வேண்டாம். அம்பிகை அருள்சக்தி என்பது திண்ணம் திண்ணம். ஆகையால் என்றுந்திருநாளாக இலங்கும்படி அன்புருவாகிய நமது பராசக்தியை வணங்கி சகல ஜீவராசிகளுக்கும் திருநாளாக்கி ஆனந்தமடைவோம்.

அன்பின்வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்தவுடம்பு—திருக்
[குறள்.

அன்போடுகூடிய வுடலே உயிருள்ளவுடலாகும். அவ் வன்பில்லாவுடலே வுயிரற்ற வுடலாகும்.

தன்மையை விரும்பி.

## மகாத்மா காந்திக்கு சக்லத்வாலாவின் கடிதம்.

அன்பார்ந்த தோழர் காந்திக்கு,

கதர் இயக்கம் சம்பந்தமாகவும் தங்கள் கட்சி இன்னது தான் என்பதிலும் திடமான ஒரே அபிப்பிராயம் நாட்டில் இருப்பதாகத் தோன்றவில்லை. கூட்டியும் குறைத்தும் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக அபிப்பிராயம் தருகிறார்கள். இதற்குத் தாங்கள் பாத்தியப்பட்டவரல்லவெனினும் அவ்வித மனக் குழப்பத்தை அகற்றுவது தங்கள் கடமையாகும்.

பணத்திரட்டும் தற்கால மேனாட்டு பௌதிக சாஸ்திரங்களையும் இயந்திர சாதனங்களையும் கைராட்டினம் பாதிப்படையச் செய்யுமேயென ஐயுறுகிறேன். அவ்விதமெனின் அதை அவசியம் கைவிட்டு விடவேண்டும்.

மேனாட்டு நாகரீகத்தை யொழிப்பதே தங்களின் பெருநோக்க மெனக் கேள்வியுறுகிறேன். இது கதர் அபிவிருத்தியால் சாத்தியப்படாது. கதரைக்கொண்டேனும் அவரவர் இஷ்டம்போல் எல்லாவித உடைகளும் தயாரித்துக்கொள்ள உங்கள் சம்மதத்தை அறிவித்து விடவேண்டும். மனிதனுக்கு பலவிதமான ஆசைகள் உண்டு. அதை அனுபவிக்கவிடாது தடுப்பது முறையாகா. பொதுவாக தற்

ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் கிடைத்து விடுமென்று ராஜீயத்திட்டம் தாங்கள் வெளியிட்டதை நம்பி தங்களுக்கு தலைவர் பதவியும் கொடுத்து ஏராளமான திரவியத்தையும் கொட்ட, ராஜீய முற்போக்குக்கான யாதொரு வேலையையும் அபிவிருத்திக்கு இடமின்றி செற்பான பேர்களையுடைய இந்தியக் குடியானவர்களுக்கு அதிலும் 2 அணா அதிகக்கூலி கிடைக்கும்படிக்கு செய்திருக்கிறேனென்றால் இது வஞ்சகமா என்ன? முன்னமே இதை அறிந்திருந்தால் தங்களை நம்பி அத்தனையும் இந்தியர் செய்திருக்கவே மாட்டார்கள். தாங்கள் இட்டகெடுவும் விட்டது. தொட்ட துறையும் பட்டது. இந்தியர் ராஜீய அடிமைகளென்பதை மறந்து பொருளாதார நிலைகுன்றியதற் கின்றியமையாதன செய்வதாகச் சாற்றுவது பொருத்தமன்று. அப்படியேபொருளாதாரந்தான் தங்கள் நோக்கமாயின் ராட்டினத்தை விட அதிக ஊதியம் தரத்தக்க மேலான எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனவே. அவைகளை ஏன் கையாளக்கூடாது? செருப்புத்தைப் பதைப்பதாலும் அதிகக் கூலிகிடைக்குமன்றோ!

ஒருபக்கம் துணிகளை ஏராளமாக உற்பத்திசெய்ய ஏற்பாடுகள் செய்து மறுபக்கம் உடைகளைச் சுருக்கமாக உபயோகப் படுத்தவேண்டுமென உபதேசிப்பது எத்துணை முரணானதுங்கூட சிலருடைய செல்வ நிலையை விருத்தி

கால அபிவிருத்திக்கு கதர் முறையானது தடைக்கல்லாகும். மேலும் கதர் உற்பத்தியால் விவசாயத் தொழிலாளர்க்கு அதிகக்கூலி கிடைக்கிறதெனச் சொல்லப்படுவதும் நிலை நிற்காததாகும். அதனதன் பேரிலுள்ள ஜனங்களின் பற்றுதலுக்கேற்றவாறே எதுவும் நிலைநிற்கும். அதனால்தான் 1921-ஹுத்திலிருந்த கதர் வேகம் தற்போது தளர்வுற்றிருக்கிறதாகத் தங்களவர்களாலே உரைக்கப்படுகிறது. நாளொன்றுக்கு இரண்டணாக்காசு தொழிலாளருக்குச்சம்பாத்தியம் கிடைக்குமாறு செய்ய எழுப்பப்பெற்ற இவ்வியக்கத்தைப் பார்க்கிலும் அதிகமான வருமானங்களைத் தருவதான முறைகள் வெளி நாடுகளில் கையாளப்படுவதைக் கவனிக்கவேண்டும். கவர்ன்மெண்டை சைத்தான் கவர்ன்மெண்டென்று ஒரேயடியாய்ச் சொல்லிவிட்டீர்களேயல்லாமல் அதன் ஆதரவுகொண்டு விவசாய முறைகளைத் தக்கவாறு திருத்தினால் எவ்வளவோ ஊதியம் பெறலாம் என்பதை அறியாமற்போனது விசனிக்கத்தக்கதாம்.

செய்ய மற்றவர்களைக் கஷ்டப்படுத்துவதுமாகும். மனிதர்க்கு வேண்டியது அதிகமான உடையும் ஏராளமான உணவும். அதை விருத்திசெய்ய வேலைய அறிஞர்கள் பல அரிய மார்க்கங்கள் தேடி வைத்திருக்கிறார்கள். உலகத்தின் இதர பாகங்களிலுள்ளவர்கள் செய்யும் செல்வ விருத்திக்கு மாறாகத் தாங்கள் நடந்துகொண்டு வருகிறீர்கள் என்றே நான் சொல்வேன்.

மகத்தான ஒரு சந்தர்ப்பத்தைத் தாங்கள் இழந்து விட்டதிலிருந்து எதிரிகளுக்கு அனுகூலமாகிவிட்டது. இனி எதையும் செய்ய இந்தியர் பயப்படுகிறார்கள். தங்கள் பிசகுகளை அறிந்த பின்னரே இந்நிலையை மாற்றித் தருமாறு தங்களைக் கேட்கின்றோம்.

மற்றவர்களைக் காட்டிலும் நாம் உயர்ந்தவர்களென்று கருதப்படுவோமானால் அவர்கள் நம்முடன் சமூகமாய்ப் பழக அஞ்சுவர். மனிதர்க்கு மனிதர் ஏற்றத்தாழ்வென்ன? தங்களைச் சாதாரண மனிதராய் சகல ஜனங்களும் கருதி அனைவரும் தங்களை நெருங்கிப் பழக வேண்டுமெனத் தாங்கள் நினைப்பின், மகாத்மா என்று தாங்களை அழைப்பதையும், தங்களைப் பல விதமாகவணங்குவதையும், என் து சகோதர சகோதரிகள் தங்கள் கால்களில் விழுந்து தொட்டு நமஸ்காரம் செய்ய அனுமதிப்பதையும் ஆபாசமாகக்கருதி ஆக்ஷேபத்திற்கிடமுள்ள இவைகளை அறவே அகற்றவேண்டும். இது அடிமைத்தனத்திற்கு ஜனங்களைத்

தயாரிப்பதாகுமேயன்றி தாங்கள் சொல்லும் சட்ட மறுப்புக்காகாதென்று வற்புறுத்திச் சொல்வேன். ஆகையால் இவ்வித முறைகளைவிட்டு பழய சாதியாக என்றேனும் வேலை செய்ய வாருங்கள். தாங்களும் சாதாரண மனிதரைப் போலிருங்கள்,

---


# அதிஷ்டம் பெற இஷ்டமா?
# லாபமடைய இஷ்டமா?

அதிஷ்டமும் லாபமும் வேண்டியதே!
ஆகையால் இன்றே நமது மித்திரன் லாட்டரிச்

## சீட்டு உங்கள் ஒவ்வொருவருக்கும் எழுதுங்கள்.

சிநேகிதர்களையும் பந்துக்களையும்
எழுதச் செய்யுங்கள்.

முதல் பிரைஸ் ரூ 3000.


---

## பிறையாறு,

### பிராமணரல்லாதார் பொதுக்கூட்டம்.

20—3—27 ஞாயிற்றுக்கிழமை திராவிடன் பத்திராசிரியர் திரு. கண்ணப்பர் அவர்களும் 21—3—27 திங்கட்கிழமை காலை குடியரசு பத்திராதிபர் திரு. ஈ. வெ. இராமசாமிநாயக்கர் அவர்களும் தரங்கைக்கு வந்துள்ளார்கள். அன்றுமாலை 4-மணிக்கு அவர்கள் தரங்கையிலிருந்து மேளவாத்தியங்களோடு ஊர்வலமாகப் பிறையாறு கடைத்தெருவுக்கு அழைத்துவரப்பட்டார்கள்.

மாயவரம் திரு. இராமநாத பிள்ளை எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. சுமார் 3000 ஜனங்கள் வரையில் குழுமியிருந்தனர். திரு. நாயக்கர் அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து இந்திய ஏழைமக்களின் பசிப்பிணியை நீக்குவதற்கு நாம் கதரையும் கைராட்டினத்தையும் ஆதரிக்க வேண்டுமென்றும், குடி, தீண்டாமை இவைகளை ஒழிக்கவேண்டுமென்றும், தற்கால சட்டசபையினால் ஏழைகளுக்கு லாபமில்லையென்றும், பிராமணரல்லாதாரின் கடமையைப்பற்றியும், அடுத்த மேமாதம் முதல்வாரத்தில் மாயவரத்தில் நடக்கப்புகும் 6-வது பிராமணரல்லாதார் மகாநாடு செவ்வனே நடைபெற பிராமணரல்லாத சகோதரர்கள் உதவி செய்யவேண்டுமென்றும் வெகு உருக்கமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. கண்ணப்பர் அவர்கள் சொற்பொழிவைத் தழுவிப்பேசுகையில் பிராமணர்கள் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்குத் தடையாய்ச்செய்யும் சூட்சிகளையும் அட்டூழியங்களையும் வெகு தெளிவாய் எடுத்துக்கூறி பிராமணர்கள் சுயநலப்பிரியர்கள் என்றும், அவர்களை நன்மை தீமைகளுக்கு அழைத்து தட்சணை கொடுக்கும் குருட்டு நம்பிக்கையை அடியோடு ஒழிக்கவேண்டுமென்றும், பிராமணருக்கு இடம்வேறு பிராமணரல்லாதார்க்கு இடம் வேறு என்ற வித்தியாசம் இருக்கிற காப்பி ஓட்டல்களுக்கு போகக்கூடாதென்றும் மிகவும் வற்புறுத்திக்கூறினார்.

அவைத்தலைவர் அவர்களின் முடிவுரைக்குப் பின் வந்தன உபசாரஞ் சொல்லப்பட்டு இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

ச. நமசிவாயநாடார்.

---

## திருநெல்வேலி ஜில்லா மகாஜனங்களுக்கு.

நமது "மித்திரன்" க்ஷேம நிதி லாட்டரிச் சீட்டு விற்பனைக்கும், பழய சந்தாப் பாக்கிகளை வசூலித்து புதிய சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டும் திருநெல்வேலி ஜில்லா வெங்கனும் சுற்றுப் பிரயாணஞ் செய்ய ஸ்ரீமான் ஏ. எம். எஸ். அண்ணாமலை நாடார் அவர்களை அனுப்பி வைத்திருக்கின்றோம். ஆகையால் அன்பிற்குரிய பெரியோர்களும், நண்பர்களும், வாலிபர்களும் இது சமயம் மித்திரன்பாலுள்ள கடமையை நிறைவேற்றஎக்காலத்தும் போற்றுமாறு அடியாருக்குச் சகலவித சகாயமுஞ் செய்து லாட்டரியை வெற்றிபெறச்செய்யவேணுமாய்த் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இன்பத்திரள்.

கல்லென கடினமாயிருப்பது பின் வழக்கத்தில் பழகப்பழக பஞ்சென லெகுவாயிருக்கும். முதவில் நம்மால் முடியாதென்றெண்ணப்படுவது, நெருங்கிப் பழகப்பழக இவ்வளவுதானு என்பதாக மிகலெகுவானதாய் விடுகிறது. கைக்குக் கிடைக்கும்வரை பெரிதாக—மேலானதாக நினைக்கப்படுவது கிடைத்தபின் முந்தியவெண்ணம் மறைந்து அதற்கு விரோதமான நினைவு உதிக்கும்.

* *

நல்லதென ஒன்றை அடையமுயற்சி செய்தும், பிரயாசைக்குப் பிரயோஜனமில்லாது போனல் சீ! சீ!! அது புளிக்கும் என வெறுக்கப்படுகிறது.

* *

பிரபஞ்சத்தில் துன்பசாகாமாகிய வண்டிக்கு ஆசையும், முனியுமே இருசக்கரங்களாக இருக்கின்றன. பொருமை ஜீவகாடிபோன்ற அச்சாயிருக்கிறது. திருப்தியற்றவர்களிடமும், நிராச் சந்தேகமுள்ளவர்களிடமும், அழுக்காறுடையவர்களிடமும், மற்றெல்லாமிருந்தும் ஒருநாளும் சந்தோஷகம் மருந்தக்கு மகப்படா. இவர்களைச் சஞ்சலம் வதுவை செய்து கொள்ளும். முற்கூறியவைகள் நல்வழி ஏகவிடாது தடுக்கும் கபாடங்கள்.

* *

யுத்தத்தில் பலரைக்கொன்று ஜெயித்தவர்களைக் காட்டிலும், சத்தியம், பொறுமை முதலிய சத்கரும ஒழுக்கங்களினின்று தவருதவர்களே மேலான வீரர்கள்.

* *

பணம், பேசும்வார்த்தைகள், கத்தி, கிணறு முதலியவைகள் நம்மொவ்வொருவருக்கும் அத்யாவசியமானவையானுலும் உபயோகிக்கும் விதத்திலிருந்து நன்மை துன்மைகளைப் பரிசளிக்கின்றன.

* *

ஒருவர் பிறரைப்பற்றிக்கூறும் அபிப்பிராயமே அவரை எப்படிப்பட்டவரென்று அறிந்து கொள்ளவழி.

* *

உலகமாகிய படக்காட்சியில் (பயாஸ்கோப்) நாம் நடிக்கும் உருவப்படங்களாயிருக்கின்றோம்.

* *

பேயால் கஷ்ட கஷ்டப்படுவோரைக்காட்டிலும் அதைரியப் பயத்தால் வருந்துவோர் மிகுதியென்பது மெய்.

* *

மிகுதியான செல்வமிருப்பதைக் காட்டிலும் தகுதியான ஒரு செல்வப் புதல்வனிருப்பது சிறந்தது.

* *

பிள்ளைகளைப் பெற்று விடுவதைக் காட்டிலும் அவர்களை நல்வழியாகிய கல்வி, நற்சகவாசம் செய்வித்து, ஒழுக்கங்களை சேரிக்கச் செய்வதே பெற்ருேர்களுக்குப் பிரயாசையான காரியமாகும்.

* *

கோபம் மனிதனை மிருகத்தினிடம் அறிமுகப்படுத்துகிறது. அன்பு மனிதனை தெய்வத்தினிடம் அறிமுகப்படுத்துகிறது.

* *

அனுபவ அறிவின்மையால் அவசரமும், பதட்டமும் முளைக்கிறது. அவசர ஆதிரத்தால் முனிஜெனிக்கிறது. சினத்தால்பகை மூண்டெரிகிறது. பகையால் கவலையும், கஷ்ட கஷ்டமும் தாண்டவமாடுகின்றன.

* *

சாகர நீரைப்படியால் அளவிடலாம். ஆனல் நாம் செய்யும் தவறுதலான குற்றத்தை எதனுலும் அளவிட இயலாது.

* *

ஒருகூடை நிறையப் புளிப்பு மாம்பழமிருப்பதைக்காட்டிலும் திவ்யமான ஒருகனி கிடைப்பது மிக மேலானது.

அ. கு. அண்ணுமலைநாடார்.

## பலதிரட்டு.

### பெண் ஆணுனுள்.

தென்னிந்தியா புதுக்கோட்டை சமஸ்தானம் திருமயம் தாலுகா காட்வொசாயிபு பள்ளிவாசலுக்கடுத்த மெய்யபுரம் என்னும் கிராமத்தில் கந்தம்பாடிஜாதி ஒப்பங்குட்டி உடையார் வீட்டில் ஒரு பெண்குழந்தை பிறந்து காதுவளர்த்து மூக்குக்குத்தி தலைவளர்த்து 18 வயதுள்ள பெண் பக்குவமாகமலே இருந்து அதனல் தாயார் தகப்பனுர்மனதிற்குக் கவலையடைந்து நமது பெண் 18 வயதுவரை பக்குவமாக வில்லையே யென்று வருத்தமடைந்து அநேக தேவாலயங்களுக்குப் பிரார்த்தனைகளை மனதிற் கோரியும் ஒன்றும் பலனடையாமல் ஒருமாதம்முன்பின்னுகப் பெண்ணடையாளம்மாறி ஆண்குறியுண்டாகி காது வளர்த்திருந்ததை அறுத்து சிறு துவாரமாக ஒட்டவைத்து குடுமிவையாமல் தலைகொண்டை வளர்த்தபடியே முத்தாயி என்ற நாமத்தை மாற்றி முத்தய்யா என்ற பெயருடன் குன்னக்குடி சுப்பிரமணிய ஸ்வாமிக்கு பங்குனி உத்திரத்துக்கு பிச்சைக் காவடி எடுத்துவருகிருன். பெண்ஜனனமாகப் பிறந்தும் அச்சரீரம் அழியாமலே மீண்டும் ஆண் ஜனனமானது அற்புதமே!

### மூளையை தவளைதின்றது.

மூந்திய வருஷத்தில் இராமநாதபுரம்ஜில்லா நெற்குப்பைக் கருகாமையிலுள்ள கிராமத்தில் தனவந்தரொருவர் குளக்கரையில் பொடிப் பட்டையை வைத்துவிட்டு குளித்தபின் கொஞ்சம் பொடியுறிஞ்சினுராம். அது


### நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

நாடார் மஹாஜனங்களே!

நீங்கள் நமது மகாஜன சங்கத்தில் மெம்பர்களா?

இன்றேல், இன்றே ஒவ்வோருருபாய் அனுப்பி அங்கத்தினர்களாகச்சேர்ந்து ஆதரியுங்கள். இவ்வருஷம் ஒரு லக்ஷம் அங்கத்தினர்களை நம் மகாஜன சங்கம் எதிர்பார்க்கிறது.

"காரியதரிஸிகள்."


முதல் தலைப்பாரம் ஏற்பட்டு அநேக காட்டு வைத்தியர்களால் சிகிச்சை செய்ய முடியாமல் சீமையிலிருந்து வந்த துரைப்பெண்ணுல் மண்டையைப் பரிசோதனை செய்து பார்க்கையில் மண்டையில் மூளையில்லாமல் ஒரு தவளை மட்டும் இருந்ததாம். முன் குளக்கரையில் வைத்திருந்தெடுத்துறிஞ்சிய பொடியுடன் சிறு தவளைக் குஞ்சு ஒன்று சேர்ந்து நாசியிலேறியிருந்திருக்க வேண்டுமென்றும் மூளை பூராவையும்தின்று விட்டதென்றும் சொன்னுளாம். அதன் பின் மனித மூளைக்குப் பதிலாக ஆட்டின் மூளையை வைத்து சிகிச்சை செய்தாளாம். இதற்காகத் தனவந்தர் அபாயநிலையிலிருந்ததன்னைக் காப்பாற்றிய துரைமகளுக்கு ரூ 2000 இனுமளித்தாராம்.

### இரங்கூனில் தீ விபத்து.

இரங்கூனிலுள்ள அலோன் பகுதியில் பெரிய நெருப்பு விபத்தேற்பட்டு லக்ஷக்கணக்காய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. 200 மரக்கடைகள் வரை சேதமாயின. 22உ முதல் 23உ மாலைவரை அணைத்துப் பார்த்தும்முடியாமல் எரிந்து கொண்டிருந்தது.

### உப்புவரிக் குறைவு.

22—3—27-ல் கூடிய இந்திய சட்ட சபையில் மணக்கு ஒன்றுக்கு ரூ 1-4-0 வரியாயிருந்ததை அணு 10 ஆகக் குறைக்கும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### காந்தியின் மருகி.

காந்தியின் புதல்வரான மகன்லால் காந்திக்கும் அகோலாவில் சிறந்து விளங்கும் நாணுவாலரம் ஷாலாலாவின் புதல்வியான அசிலாதேவிக்கும் விவாகம் நடைபெற்றது. 19-வயதுடைய பெண் நூல் நூற்கத்தெரிந்தும் சங்கீதம் கற்றும்சித்திரம் வரைய அறிந்துமுள்ள மிக சௌந்தரியம் வாய்ந்த அணங்கு. கலியாணத்திற்கு நண்பர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். ஆடம்பரமின்றி எளிய வாழ்வில் திருமணம் நிறைவேறியது. சுத்தக் கதருடையில் மணமக்கள் விளங்கினர். மகாத்மாகாந்தி ஒரு கீதையையும் ஒரு ஜெபமாலையையும் தன்னுலே நூற்கப்பட்ட ஓர் கதர் மாலையையும் பஜனை செய்தற்கேற்ற புஸ்தகமொன்றையும் தனது மருகிக்குப் பரிசளித்திருக்கிருர்.

### கொலைத்தண்டனை.

சுவாமி சிரத்தானந்தரைக் கொலை செய்த அப்துல்ரஷீத் வைத்தியப்பரிசோதனையில் பைத்தியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டு செஷன்ஜட்ஜால் கொலைத்தண்டனை விதிக்கப் பெற்றிருக்கிருன். இதை ஆக்ஷேபித்து ஹைகோர்ட்டில் மனுக்கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது. ஆனல் குற்றவாழியைத்தப்பித்து மன்னித்துவிடலாமாவென்று ஆரிய சமாஜத்தலைவர்களுக்குள்ளே அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தெரிகிறது. இங்கிலாந்தினின்றும் இந்தியாவிற்கு வந்திருக்கும் சகலத்வாலாவும் குற்றவாழியை மன்னித்து விடுமாறு சுவாமி சிரத்தானந்தரின் குமாரராகிய இந்திராவுக்குத் தந்தியனுப்பியிருக்கிருர். பகைவனையும் மன்னிக்கும் பான்மை ஸ்ரீமான் இந்திராவிடம் இருப்பதாகவும் ஆனல் குற்றவாளிமேல்கோர்ட்டில் அப்பீல் செய்திருப்பதால் அவ்விசாரணைமுடிவெய்திய பின்னரே மன்னிப்பதற்கு இடமிருப்பதாகவும் பதில் விட்டிருக்கிருர்.

### ஜப்பான் பூகம்பம்.

ஜப்பானில் இம்மாதம் மீண்டும் பூகம்ப அதிர்ச்சி யுண்டாயது. 1000க் கணக்கான ஜனங்கள் மாண்டனர். அதிர்ச்சி பலமாக விருந்தது.

1874ம் வருடம் தாகும்பு என்னும் அரசனல் விக்டோரியா மகாராணிக்கு பீஜித்தீவு கொடுக்கப்பட்டது.

வங்காளப் புதிய கவர்னர் ஸர் ஸ்டான்லி என்பவர் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டுவிட்டார்.

ஸ்ரீமான் ஜே. எல். பெயிர்டு என்பார் 'டெலிவைசர்' எனும் ஞானக் கருவியொன்றைக் கண்டு பிடித்திருக்கிருர். இதனுதவிகொண்டு தூரத்திலுள்ளவைகளை அறிந்து கொள்ளலாம். பூதக்கண்ணுடி கொண்டும் தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கலாமெனினும் வெளிச்சமின்றி இருட்டிலும் குகைகளிலும் இதனுதவிகொண்டு அறியலாமாம்.


"நாடார்குல மித்திரன்"
க்ஷேம நிதி லாட்டரிச் சீட்டு
நீங்கள் ஒவ்வொருவரும்
விற்பனை செய்யுங்கள்.
ந ன் றெ ன் ப தை
இன்றே செய்க!


## இலங்கை.

துதுவா என்ற கிராமத்திலுள்ள அண்டிரிஸ் என்பவனை பென்னேட்டகதியில் முதலைபற்றிக் கொண்டது. மனிதன் அலறவே ஜனங்கள் ஓடோடியும் வந்து ஆர்ப்பரிக்க முதலை விட்டுவிட்டு ஓடிவிட்டது. காயம்பட்ட அம்மனிதன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிருன்.

குருநாக்கலில் நெடுநாட்களாய் மழையில்லாது போயிற்று. தண்ணீருக்கு அதிக் கஷ்டமாயிருக்கிறது. கிணறு, குளம், குட்டை இவைகள் வரண்டுவிட்டன.

15-3-27ல் கண்டி வங்கியில் காவற்காரன் மேல்மாடியிலிருந்த குழவிக்கூட்டைக்கலைக்க நெருப்பை வைத்தான். நெருப்பு தெரியாமல் தட்டியொன்றில் பற்றி ஆபத்தில் மாட்டிவிட்டது. அது சமயம் வில்சன் என்பவர் ஓடிவந்து துணிகரமாய் நின்று நெருப்பை அணைத்தார்.

கொளும்பு, நவ்வக்வீதியிலிருக்கும்இலங்கைநந்திய மாணவர் சங்கத்தின் 7வது வருடக்கொண்டாட்டம் நடைபெற்றது. அதில் தற்போது 602 அங்கத்தினர் களிருக்கின்றனர். பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரசங்கங்களும், கான்பரன்ஸ்களும், உபந்நியாசங்களும் நடைபெறுமாம்.

சென்னை கிறிஸ்தவ வாலிப சங்கத்திலிருந்து வந்திருக்கும் ஐரோப்பிய பால்யபாதிரியார் 17-3-27ல் பிடில் ஹார்மோனியம், மிருதங்கம்ஆகியபக்க மேளங்களுடன் கொளும்ப ஜம்பட்டா தெருவிலுள்ள வெஸ்லியன் கிறிஸ்தவர் கோயிலில் தமிழில் ஒரு கதாப்பிரசங்கம் வெகு சோத்தியாய்ச் செய்தார். இதுவரை ஒரு ஐரோப்பியர் இத்துணை சாதுர்யம் படைத்திலரென்பே அறையலாம்.

### கந்தசாமிபுரம் கிராமப்பஞ்சாயத்து.

(தேவிதாசன் எழுதுகிருர்.)

சாளது மார்ச்சுமீ 14உ மித்திரனில் நண்பர் கோ. எசுதாஸன் எழுதிய மறுப்பு வியாசத்தைக் கண்டோம். ஷை மறுப்பு சிருபம் முழுவதும் தவறுதலாக எழுதப்பட்டிருக்கிறது. சட்டப்படி ஏற்பட்டதாகவும், பேப்பர்களிலும், கெஜட்டிலும் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்வது உண்மையேயானுலும் மாறுபாடான முறையில் உண்மைக்கு விரோதமாக அவ்வண்ணம் செய்யப்பட்டிருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கிறது. ரெக்கார்டு செய்வது இக்காலத்தில் பெரிய காரியமல்ல என்று மட்டும் குறிப்பிட்டு விட்டுவிடுகின்ரோம்.

கிராமப் பொது ஜனங்கள் பொதுக் கூட்டம்கூடி ஷை பஞ்சாயத்து சட்டப்படி ஏற்படவில்லையென்றும், அது தங்களுக்குத் தேவையில்லையென்றும், தீர்மானம் செய்து பஞ்சாயத்து ரிஜிஸ்டிராருக்கும், சென்னை கவர்ன்மெண்டாருக்கும், நமதுகுல சட்டசபை மெம்பர்களுக்கும் மனுச்செய்துகொண்டிருக்கிருர்கள் என்பது வெளிப்படை. இவ்விஷயத்தில் கிராமத்தின் பெரியோர் பலர் கலந்திருப்பதும் வெளிப்படையான விஷயம். ஆக, பத்திரிகையில் விஷயத்தைத் திரித்துக்கூறி மழுப்புவது உசிதமாகாது. கூடுமானவரையும் நீதியும், சத்தியமும் இருக்கட்டும். இத்துடன் நிறுத்துகின்ரோம்.

குறிப்பு:—இது சம்பந்தமான வியாசங்கள் இனிப்பிரசுரிக்கப்பட மாட்டா.

ப-ர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கோப்பிராயக்கன்படி.

ஸ்ரீமான் நாட்டாண்மை எஸ். மாடசாமிநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கோப்பிராயக்கன்பட்டி பால்ய நாடார் சங்க மாசி மாத கூட்டம் வி. கே. வித்தியாசாலையின் சபாமண்டபத்தில் கூடியது.

அச்சமயம் அக்கிராசனர் முகவுரை கூறி கடவுள் வாழ்த்துப் பாடியபின் ஸ்ரீமான்களான எஸ். தவசிகாயக்கர், வி. யோவுநாடார், நா. க. ச. மாரியப்பநாடார், ஜீ. செல்லநாடார், எஸ். பழனிச்சாமிநாடார், எஸ். ராமையா முகவியார், கொத்தான மூத்து நாடார், ஜெ. எ. பொன்னையாநாடார், முதலிய பெரியோர்களால் முறையே மாணவரின் கடமை, பத்திரிகையின் பிரயோசனம், யாத்திரையின் விசேஷம், கல்வி, ஒற்றுமை, தருமம், பக்தி, நாடார்குல மித்திரனால் உண்டான நன்மையும், நாம் அதற்குச் செய்ய வேண்டிய உதவியும் என்பவைகளைப்பற்றி பேசியபின், செக்ரட்டரியவர்கள் "நாடார் குல மித்திரன்" க்ஷேமநிதி லாட்டரிச் சீட்டைக் குல அபிமானிகளும் மற்றவர்களும் வாங்கி கமதமித்திரனை ஆதரிக்கும்படி பேசியும், ஸ்ரீமான் வை. மு. சண்முகவேல் நாடார் அவர்கள் கோப்பிராயக்கன்பட்டிப் பால்யநாடார் சங்க வாசகசாலைக்கு நன்கொடையாக ஆறு புஸ்தகங்கள் அனுப்பிய நல் நோக்கத்திற்கு சங்கத்தின் பேரால் நன்றி செலுத்தியும், அக்கிராசனர் முடிவுரை கூறியும் கூட்டம் இனிது கலைந்தது.

ஜெ. எ. பொன்னையா நாடார்.

## தாய்மார்கள் கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேன் காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம்; எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுப்பிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பி வைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:— காத்துக்கருப்பு விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்,
இனாம்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

## உடனே தேவை.

தமிழ் ஜில்லாக்களிலும் கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன் முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜெயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம், (திருச்சி.)


# அவை எங்கே கிடைக்கும்?

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் மு. ஆ. முத்துநாடாரவர்கள் இயற்றிய

தென்னாட்டுப்புலி
ஜெம்புலிங்கம் ஜீவிய சரித்திரம். (1)

ஐரோப்பா யுத்தத்தில் அரும்பாடுபட்ட
அவுலியா நாடார் ஜீவிய சரித்திரம்.
(சித்திரப் படங்களுடன் கூடியது.) (2)

திருமலையப்பபுரம் ஸ்ரீமான் பா. பி. இரத்தினபாண்டியர் இயற்றிய
சௌந்தரகாந்தி நாவல். (3)

சென்னை நாடகாசிரியர் ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்க நாடாரவர்கள் இயற்றிய
நாடார் மகாஜன சங்க வாரக்கீர்த்தனை. (4)

ஆகியவைகள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். வாங்கிப்பயன் பெறுங்கள்.

"இரத்தின விலாஸ்",
28 நெ. 1-வது குறுக்குத்தெரு,
கொழும்பு.



# B. Abdul Karim Sahib,

**Kareemiya Unani Medical Store,**
**Cuddalore, O. T., (South India)**

அருமை துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், வலத்தையும், நரம்புத்திடத்தையும், அதிஅற்புத ஆச்சரியமான இன்பசுகசக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்து கொள்ளலாம். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் கடிதங்களும், தங்க மெடலும் பரிசுபெற்ற

ஜவாஹீர் முபற்ரு என்னும்

## மதன மோஹன ஜவாஹீர் குருவி கிருத லேகியம்.

அசல் பாகம்! அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்த கம்பெனியார்களும் செய்து காட்டும்பக்ஷத்தில் அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூ 500 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" வேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே தாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சித்சுகவின்ப நலங்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகமத்திய "காமசஞ்சீவினி" இதுதானோ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே தின்னுர் மோகக்கன்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிதக் காரணங்களினாலும் தேஹத்திற்குச் சத்காரணமாகிய நாதவிந்தை வீண் விரயஞ் செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வீரிய விர்த்தி குறைந்து உலகின்பசக்தியை இழந்த ஆண் தன்மையற்ற வயோதிகர் போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும் எலும்புருக்கி வெட்டைச் சூட்டினாலும் ஜீவரத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து தரிதஸ்கலிதமுடையோரும், சித்திரபங்கமென்னும் சொர்ப்பனஸ்கலிதத்தால்நாளும்வாதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களும் சுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து இம்புலன்களின் உற்சாகமுங் குறைந்து, வியாபக சக்தி குறைவு, கைகாலசதி, தேக காங்கை, இடுப்புவலி, பசி மந்தம், மலச் சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்வ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய லாயர்கள், குமஸ்தாக்கள், பாடலீகர்களும் மற்றும் வியாபக சக்தியால் வேலையையுடைய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும் வியாபகவிர்த்தி புதியமேனியையும் இரத்த விர்த்தி, வீரிய விர்த்தி, சந்தானவிர்த்திமுதலிய சர்வ நலங்களையும் பெறுவார்கள். சீக்கிரஸ்கலிதமுடையவர்களுக்கு இது ஓர் இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும்; குணம் செய்வதில் இது மஹாவல்லமையும், பெரும் பிரகிர்த்தியும் பெற்றது. இதனை பரீக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம் செய்யும் சத்தியமான சித்தாமிர்தயோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியுங் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும். தன்னை பலப்படுத்திக்கொள்ள காமபோகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரீக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 10—0—0
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 5—0—0
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ ௩—0—0

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

B. அப்துல் கரீம் சாயபு,
கரீமியா யூனானி மெடிகல் ஸ்டோர்,
கடலூர், O. T.



உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் செவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடைபெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக்கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேச்சர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக்கூடியது. சயிஸ் 6"-6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—

ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
மவுண்ட் ரோடு, மதராஸ்.



## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

# ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால் உங்களுடைய ஜெனனநட்சத்திரம் அல்லது பெயரை எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய பலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்ப சாஸ்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
என்னூர், செங்கல்பட்டு ஜில்லா.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection